## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE SPECIAL MAGISTRATE, KARUR

C.C. No. 416/2022

Prosecution PW 8

Deposition of Witness for Defence

Court

Name : பத்ம சீலன்

Father's Name :

Village :

Taluk :

District :

Age :

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 25.03.2026.

**எதிரி ஆஜரில்லை. 317 குவிமுசவின் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கரூர் நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.08.2018 ம் தேதி காலை 16.00 மணிக்கு உதவி ஆய்வாளர் ராஜேஸ்வரி நிலைய பொறுப்பில் இருந்தபோது

கார்த்திகேயன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துப்பூர்வமான புகாரை பெற்று நிலைய குற்ற எண்.566/2018, ச.பி. 294(பி), 324, 506(2) இ.த.ச வின்படி வழக்கு பதிவு செய்துள்ளார். **அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினம் 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் தொடர்ந்து 1 முதல் 8 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரிகள் கரூர் அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று சென்றதால் கைது நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை.

3. இவ்வழக்கில் காயம்பட்ட ஆறுமுகம் என்பவருக்கு சிகிச்சையளித்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் வழங்கிய கரூர் மருத்துவ கல்லூரி அரசு மருத்துவமனை மருத்துவர் முருகேசன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் காயம்பட்ட கார்த்திகேயன் என்பவருக்கு சிகிச்சையளித்து காயச்சான்றிதழ் வழங்கிய கரூர் மருத்துவ ராஜ் ஆர்த்தோ மருத்துவமனை மருத்துவர் அன்பழகன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மருத்துவர் வழங்கிய காயச்சான்றிதளில் கார்த்திகேயன் மற்றும் ஆறுமுகத்திற்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என காயச் சான்றிதழ் வழங்கியதால் இவ்வழக்கின் சட்டப் பிரிவை 294(பி), 324,506(2) இதசவிலிருந்து 294(பி),326,506(2) இதசவாக மாற்றம் செய்து அதன் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இத்துடன் உதவி ஆய்வாளர் தனது புலன் விசாரணையை முடித்து குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

## எதிரி தரப்பு குறுக்குவிசாரணை

அ.சா.1 எந்தப்புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் புகார் தயார் செய்யப்பட்டு கையெழுத்து செய்யப்பட்டது

என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த சாட்சி பட்டியலை வைத்துக்கொண்டு சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகள் யாரையும் விசாரிக்காமல் காவல் நிலையத்தில் வைத்து வாக்குமூலங்கள் தயார் செய்து கொண்டு எதிரியின் மீது தவறுதலாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஓம்./−எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**